2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. திருநாவுக்கரசு அவர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) டாக்டர் குமாரதாஸ், நீங்கள் என்னுடைய அனுமதி கோரி எதுவும் கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து .... (குறுக்கீடுகள்) டாக்டர் குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதியின்றி பேசினால் வெளியேற்ற வேண்டி வரும். குமாரதாஸ் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் (குறுக்கீடுகள்) திரு. திருநாவுக்கரசு உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்). இது கவன ஈர்ப்புத் தீர்மானம். இதிலே வேண்டாம். இன்று பொது விவாதத்தின் மீது நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். எனவே அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதிலே உங்களுக்குப் பதில் கொடுத்திருக்கிறேன். அதையும் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் பதில் கொடுத்திருக்கிறேன். என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன் அவர்களும் முதுகுளத்தூரில் ஒரு கலவரப் பகுதியாக இருக்கிறது என்று ஒரு குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கும் அந்தப் பதில் கொடுத்து இருக்கிறேன். இன்று துணை மானியக் கோரிக்கையின் மீது உங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதன்மீது பேசும்போது சொல்லலாம். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ், (குறுக்கீடு) இன்று நீங்கள் பேசுவதற்கு இங்கே வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும். (குறுக்கீடு) அறையிலே கேட்டதாகச் சொல்கிறீர்கள். அறையிலே கேட்டதை இங்கே வந்து எழுப்பக்கூடாது. அறையிலே கேட்கவேண்டியதை இங்கே வந்து கேட்கக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு). உட்காருங்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்புகள் தொடர்பாக என்னுடைய அறையில் சொன்ன ஒவ்வொருவரும் கொடுத்திருக்கின்ற அறிவிப்பின் மீதும் இங்கே நான் விளக்க முடியாது. (குறுக்கீடு) நான் கேட்டதற்குப் பதில்சொல்லியிருக்கிறேன். உங்களுக்கு என்னுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறேன். அதை அவையில் வந்து கிளப்பவேண்டுமெனபது இல்லை,